# நாங்கள், உங்களுடைய தகவல்களை இரகசியமாக வைத்திருப்போம்

நீங்கள் எங்களிடம் கூறும் எதுவும் இரகசியமானவை. இதன் பொருள் என்னவென்றால், நீங்கள் ஏற்றுக் கொண்டால் அன்றி, நீங்கள் எங்களுக்குக் கூறுவதை அல்லது கொடுப்பதை எவருக்கும் நாங்கள் சொல்ல முடியாது.

சில நேரங்களில் லீகல் எய்ட் ஒரே வழக்கில் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களுக்கு உதவுகிறது. எங்களிடம் வழக்கறிஞர்கள் நிறைய இருக்கிறார்கள். எனவே எங்கள் வழக்கறிஞர்களில் ஒருவர் உங்களுக்கு உதவலாம், அத்துடன் மற்றொரு லீகல் எய்ட் வழக்கறிஞர் நீங்கள் தகராறில் உள்ள நபருக்கு உதவி செய்யலாம்.

அல்லது உங்களுடைய வழக்குடன் சம்பந்தப்பட்ட வழக்கறிஞருக்கு இன்னொரு வழக்கறிஞரும் உதவலாம்.

எங்களுடைய உதவியை நீங்கள் ஏற்றுக்கொண்டால், உங்களுடைய இரகசியத் தகவல்களைப் நாங்கள் பாதுகாக்கும் வழிமுறையை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள்.

## உங்களுடைய வழக்கறிஞர் உங்களைப் பற்றிய தகவல்களை மட்டுமே வைத்திருப்பார்

இதன் பொருள் என்னவென்றால் உங்களுடைய வழக்கறிஞருக்கு:

- மற்ற நபர் பற்றி எதுவும் தெரியாது
- மற்ற நபரைப் பற்றிய தகவல்களைப் பெறமாட்டார், அத்துடன்
- மற்ற நபருடைய வழக்கறிஞருடன் உங்களைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்ளமாட்டார்.

அத்துடன் மற்றவரின் வழக்கறிஞருக்கு உங்களைப் பற்றியோ அல்லது உங்களுடைய விடயத்தைப் பற்றியோ எதுவும் தெரியாது.

## உங்களுக்கு கேள்வி ஏதேனும் உள்ளதா?

உங்களுடைய இரகசியத் தகவல்களை நாங்கள் எவ்வாறு கையாள்கிறோம் என்பதைப் பற்றி ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், உங்களுடைய சட்டச் சிக்கலைப் பற்றி வழக்கறிஞரிடம் சொல்வதற்கு முன்பாக அவர்களிடம் உங்கள் சந்தேகங்களைக் கேளுங்கள்.

Legal Aid NEW SOUTH WALES